# செம்மொழிப் பூங்காவில் மலர்க் கண்காட்சி ! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கண்டு மகிழ்ந்தார் !



சென்னை, செம்மொழிப் பூங்காவில், நேற்று (10.02.2024) முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மலர்க் கண்காட்சியை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர்நலத் துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் / அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மை விற்பனைத் துறை ஆணையர் / முதன்மைச் செயலாளர், ஜி.பிரகாஷ், வேளாண்மை – உழவர் நலத்துறை அரசு சிறப்பு செயலாளர் முனைவர் பொ.சங்கர், வேளாண்மைத்துறை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல் பாண்டியன், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சி தலைமை செய்தி ஆசிரியர் ப. திருமாவேலன் எழுதிய ‘வைக்கம் வீரரும் ஜெயமோகன் கயமையும்’ நூல் வெளியீட்டு அறிமுக விழா காஞ்சிபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நூலினை அமைச்சர் எ.வ.வேலு வெளியிட அமைச்சர் தங்கம் தென்னரசு அதன் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். விழாவுக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், காஞ்சிபுரம் மேயர் மகாலட்சுமி யுவராஜ், மாநகரச் செயலாளர் தமிழ்ச்செல்வன், பதிப்பாளர் கருப்பு பிரதி நீலகண்டன், எழுத்தாளர் பி.என்.எஸ்.பாண்டியன் ஆகியோர் பங்கேற்றனர்.

# செம்மொழிப் பூங்காவில் மலர் கண்காட்சி !

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார் !

சென்னை, பிப்.11–

சென்னை செம்மொழிப் பூங்காவில் மலர்க் கண்காட்சி ஒரு வாரம் நடைபெறுகிறது. மலர்க் கண்காட்சியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று தொடங்கி வைத்தார். குளிர் பிரதேசங்களில் நடத்தப்படும் மலர் கண்காட்சியை சென்னையில் நடத்தினால் எப்படி இருக்கும் என்ற சென்னை மக்களின் ஏக்கத்தைப் போக்கும் வகையில் தமிழ்நாடு தோட்டக்கலைத்துறை சார்பில் சென்னை செம்மொழிப் பூங்காவில் இந்த மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது. கடந்த ஆண்டு, ஜூன் மாதம் மலர் கண்காட்சி நடத்தப்பட்டது. இதற்கு பெருமளவில் வரவேற்பு கிடைத்தது. இந்நிலையில், சென்னை செம்மொழிப் பூங்காவில் மலர் கண்காட்சி நேற்று தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த மலர் கண்காட்சியை, அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று தொடங்கி வைத்தார். விழாவுக்கு, அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மேயர் பிரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சட்டமன்ற உறுப்பினர் எழிலன், துணை மேயர் எம்.மகேஷ்குமார், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குனர் குமாரவேல் பாண்டியன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் அபூர்வா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கிருஷ்ணகிரி, கொடைக்கானல், குமரி, மதுரையில் இருந்து அரிய வகை மலர்கள் எடுத்துவரப்பட்டு கண்காட்சியில் பயன்படுத்தப்படுகிறது. 10 லட்சம் மலர்கள் இந்த கண்காட்சியில் பயன் படுத்தப்படுகிறது. மலர் கண்காட்சி நுழைவுக் கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ.150, குழந்தைகளுக்கு ரூ. 75 நிர்ணயம் செய்யப்படுகிறது.





